DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 134 /2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : முத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th May 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் மாணிக்கம், ராமசாமி மற்றும் அய்யம்மாள் ஆகியோரை தெரியும். அ.சா.1 வேல்ராஜை தெரியும். ஆஜர் எதிரிகள் மற்றும் அ.சா.1 எங்களது ஊர்காரர்கள் என்பதால் எனக்கு அவர்களை தெரியும். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

20.10.2014 ம் தேதி இரவு சுமார் 7.00 மணிக்கு நான் மாணிக்கம் வீட்டு முன்பு நின்றுகொண்டிருந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த அ.சா.1 மூங்கில் களை கம்பயையும் தனக்கு தரவேண்டிய பணத்தையும்எதிரி மாணிக்கத்திடம் கேட்டபோது எதிரி மாணிக்கமும் எதிரி அய்யம்மாளும் அவர்கள் மகன் எதிரி ராமசாமியும் சேர்ந்து அ.சா.1 ஐ கெட்டவார்த்தையால் ஏசினார்கள் என்றும், அவரை எதிரிகள் மாணிக்கம் மற்றும் ராமசாமி கம்பால் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், பின்பு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால், கூறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**